பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்
ஸல்லல்லாஹு அலா முஹம்மது
ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

# ஏகாந்த முத்துகள்

அருளுரை

வஹ்தத்துல் வுஜூத்

ஏக காட்சி

ஏகாந்தம்

சமரசம்

தவ்பா - பாப மன்னிப்பு

சோபனம்



ஊர்: ..............................................................................

ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை

2024

# அருளுரை

ஏகார்த்தத்தை விளக்காத எந்த ஒரு இல்மும் பலன் தராது. தன்னிலையை அறிந்தவனே பூரண மனிதனாவான். மனிதன், சிருட்டிகளை அறிய முயல்கின்றபோது தன்னை அதிலிருந்து வேறுபடுத்துகின்றான். இதனால் அவன் மறைவிலா வெளியிலிருந்து துண்டிக்கப்படுவான். ஏகாந்தத்தைச் சரியான முறையில், காமிலான ஷைகு அளவில், அவர்களின் ஞான அறிவின் மூலம் அடைவதே பரமானந்தம்.

சங்கைக்குரிய நமது பாட்டனார் குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத் **ஜமாலிய்யா அஸ்ஸய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம்** அவர்களின் வழிமுறையின்படி, இந்த ஏகாந்த முத்துகளை நாம் அறிந்து, நித்திய ஜீவன் பெற்றிடுவோமாக!

**- சங்கைக்குரிய ஷைகு நாயகம் குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் அலி மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்கள்.**

بسم الله الرحمن الرحيم

# وحدة الوجود

هُوَ الْوُجُودُ لَا لَهُ أَشْيَا اُخَر
هُوَ الْكَمَالُ اَنَّهُ لَا مُخْتَصَر

هُوَ الَّذِي الْانَ بِالتَّصْرِيفِ
بَلْ اَنَّهُ مِثْلُ الْقَدِيمِ الْمُفْتَخَرُ

اَيْنَ كَمَا بِمَا وَكَيْفَ لَا لَهُ
وَلَا الضَّمَائِرُ كُلُّهَا بِمُحْتَصَر

بَطْنًا وَّظَهْرًا لَا لَهُ فِي كُنْهِهِ
خُلُقٌ وَذَاتُهُ بِمُطْلَقٍ طُهر

وَمَنْ فَنَى فِي وَحْدَةِ الْوُجُودِ
مِنْ عِنْدِهِ كُلٌّ تَجَلّٰى وَظَهَر

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்
ஸல்லல்லாஹு அலா முஹம்மது
ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

# ஏக காட்சி

அதுவே ஏக மயமானது (அனைத்தும் அதுவேயாதலால்) அதனைத் தவிர்ந்த வேறு பொருட்கள் அதனுக்கு (அயலாய்) இல்லை. அதுவே பூரணமானது. அதுவே குறுக்கமானதன்று.

இப்பொழுது அது மாறுபட்டுள்ளது. எனினும் அது பெருமைக்குரிய பழமையை (முன்னிருந்ததை)ப் போன்றது.

எங்கே? என்பதும் ஒன்றைப் போன்றது என்பதும் ஒன்றைக் கொண்டு (ஆனது) என்பதும் எப்படி? என்பதும் அதற்கில்லை. (நான், நீ, அவன், அவள், நாங்கள், நாம், அவர்கள், இவர்கள், அது, இது, அவை, இவை முதலாம்) பிரதிப் பெயர்கள் அனைத்தும் அதனைக் கட்டு(மட்டு)ப்படுத்துபவையன்று.

உள்ளாலும் வெளியாலும் அதன் தாற்பரியத்திலே அதற்கு (இப்படித்தான் எனும்) சுபாவம் (பாங்கு) இல்லை. அதன் பிரணவ உள்ளமை பரிசுத்த சம்பூரணமாகும்.

ஏக மயத்தில் எவன் தன்னை அழித்தானோ அவனிடத்திருந்து அனைத்தும் தோன்றும்; வெளியாகும்.

.

(முற்றும்)

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்
ஸல்லல்லாஹு அலா முஹம்மது
ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

# ஏகாந்தம்

நீயென்றும் நானென்றும் – நிலை கொண்ட தொன்று
மாயத்துண் மறைந்தாலு – மதிகொண்ட தொன்று

நானென்னும் காயத்துள் – நீயே மறைந்தாய்
நீயென்னும் அருவத்துள் – என்னை மறைத்தாய்

பன்னாமம் பூண்டாலும் – பரமாவ தொன்று
தன்னாமம் துறந்தாலும் – பரமாவ தொன்று

பேதங்கள் பலவாகப் – பெயர்ந்தாலு மொன்று
பூதங்கள் பலபேர் பொ – திந்தாலு மொன்று

பூதங்களாமென்ற – பேதங்கள் பெற்றாய்
நாதத்தினமைவான – நாமங்கள் பெற்றாய்

வேதத்தின் பிரிவாலே – வேறாதல் கண்டாய்
வாதத்தில் மூழ்கிப் பின் – வாட்டங்கள் கொண்டாய்

வேதங்க ளொன்றான – வேதாந்தம் நீயே
பேதங்கள் நிலையாத – போதாந்தம் நீயே

வெளிவேடம் போர்த்தித்தான் – உன்னை மறைத்தாய்
தெளிவான திரைகொண்டு – தேரா மறைந்தாய்

மறையென்னும் திரையாலே – மறைதத்வ மீந்தாய்
மறைதத்வ மறியாரை – மறைத்தே நிறைத்தாய்

அறியாரும் அறிந்தாரும் – உன்னில் உறைந்தார்
நெறியற்ற நாத்திகர் – தாமு முறைந்தார்

இறந்தாரும் இருப்பாரும் – இறை உன்னிலானார்
நீயற்ற இடனின்றி – நீயே நிறைந்தாய்

நீயற்ற இடனின்றி – நீயே நிறைந்தாய்
நீநானெ னும்பிரிவி – லாதே நிறைந்தாய்

நிறைந்தாயே நிறைந்தாயே – நீயே நிறைந்தாய்
இறையன்னுந் திருநாமம் – கொண்டே நிறைந்தாய்



பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்
ஸல்லல்லாஹு அலா முஹம்மது
ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

# சமரசம்

ஜோதி மயந்தனில் ஜாதி மதந்தனை
நீக்கிடுவோம் (நிதம்) நீக்கிடுவோம்

ஆதி மதந்தனில் ஏதமற நிலை
நின்றிடுவோம் (நிலை) நின்றிடுவோம்

பேதமறப் பின்னிப் போதமுறும் வகை
ஒன்றிடுவோம் (நிலை) ஒன்றிடுவோம்

வேத வேதமென்று நாதசுரம் பாட
விட்டுவிடோம் (நாம்) விட்டுவிடோம்

நாதசுரம் பாடும் ஆதி பகைஞனைக்
கொன்றிடுவோம் (நாம்) கொன்றிடுவோம்

காதலுறும் தெய்வக் காதலரை யென்றும்
சேர்ந்திடுவோம் (நிதம்) சேர்ந்திடுவோம்

ஏதமிலா வழி ஆதிவழியதைப்
பேணிடுவோம் (என்றும்) பேணிடுவோம்

நாதமா மோங்கார நீத சத்திதனில்
மாய்ந்திடுவோம் (என்றும்) மாய்ந்திடுவோம்

ஈதா முலகினில் ஆதியறப் பிணம்
ஆகிவிடோம் (நாம்) ஆகிவிடோம்

சோதி வடிவினில் பேதஉருதனை
மாய்த்திடுவோம் (நாம்) மாய்த்திடுவோம்

ஜோதி மயந்தனில் ஜாதி மதந்தனை
நீக்கிடுவோம் (நிதம்) நீக்கிடுவோம்

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்
ஸல்லல்லாஹு அலா முஹம்மது
ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

# பாப மன்னிப்பு : توبة

يَا اِلٰهِيْ يَا اِلٰهِيْ يَا اِلٰهِيْ يَا اِلٰهِيْ

ஆதியேகா, ஆதியேகா, ஆதியேகா, ஆதியேகா

١ يَا اِلٰهِيْ قَدْ نَسِيْنَا اَصْلَ حَقٍّ يَا اِلٰهِيْ
بَعْدَ وَضْعِ شِبْهِ اِنْسٍ كَثْرَ شُغْلٍ يَا اِلٰهِيْ

1. ஆதியேகா உனது மூல தத்வ மறந்தோம் ஆதியேகா.
பேத உதய உருவ வினையில் உனை மறந்தோம் ஆதியேகா.

٢ يَا اِلٰهِيْ قَدْ لَبِسْنَا ثَوْبَ جِسْمٍ يَا اِلٰهِيْ
نَحْنُ كُنَّا تَحْتَ حُجُبِ الْجَهْلِ دَوْمًا يَا اِلٰهِيْ

2. ஆதியேகா உடற்றிரையால் நாம் மறைந்தோம் ஆதியேகா.
ஆக்கை கொண்ட மடமைத் திரையால் நித(ம்) மறந்தோம் ஆதியேகா.

٣ يَا اِلٰهِيْ نَحْنُ اَخْفَيْنَا حَقِيْقَةً يَا اِلٰهِيْ
نَحْوَ حِقْدٍ كِبْرِ عِلْمٍ حَسَدٍ ذِهْنٍ يَا اِلٰهِيْ

3. ஆதியேகா உண்மை தன்னை மறைத்து விட்டோம் ஆதியேகா.
அறிவின் கர்வம் அகப் பொறாமை கெடும்பு திரையாம் ஆதியேகா.

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்
ஸல்லல்லாஹு அலா முஹம்மது
ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

٤ يَا اِلٰهِيْ نَحْنُ كُنَّا بِالنِّفَاقِ يَا اِلٰهِيْ
نَحْنُ كُنَّا سَارِقًا بِالْحَقِّ رَيْنٍ يَا اِلٰهِيْ

4. ஆதியேகா கறையும் வஞ்சனையும் கொண்டோம் ஆதியேகா.
ஆதியுண்மை தனை மறைக்கும் கள்ளங்கொண்டோம் ஆதியேகா.

٥ يَا اِلٰهِيْ كَيْفَ نَخْلَعُ مَا طَوَيْنَا يَا اِلٰهِيْ
عِنْدَ نَظَرٍ ثُمَّ سَمْعٍ اَكْلِ طُعْمٍ يَا اِلٰهِيْ

5. ஆதியேகா காட்சி கேள்வி உண்ணல் திரையை ஈந்த ஏகா.
ஈது நம்மைச் சுற்றும் திரையைக் களையும் வழிதான் ஏது ஏகா.

٦ يَا اِلٰهِيْ ثُمَّ شَمٍّ حِسِّ بَدَنٍ يَا اِلٰهِيْ
كَانَ حُكْمُ الظَّاهِرِيَّةِ سِتْرَ حَقٍّ يَا اِلٰهِيْ

6. ஆதியேகா உணர்வு மோப்பு யாவும் திரையாம் ஆதியேகா.
வேத திட்டம் வெளிப்படையில் ஆதி திரையாம் ஆதியேகா.

٧ يَا اِلٰهِيْ لِمَ جَعَلْتَ بِالشَّرِيْعَةِ يَا اِلٰهِيْ
سِتْرًا بَعْدَ سِتْرٍ غَيْرَ عَدَدِ سِتْرٍ يَا اِلٰهِيْ

7. ஆதியேகா வேத நெறியை ஏன் வகுத்தாய் ஆதியேகா.
ஈது திரையின் மேற்றிரையாய் நிறை திரையாம் ஆதியேகா.

٨ يَا اِلٰهِي كُلُّ عِلْمٍ عِنْدَنَا سَدٌّ اِلٰهِي

ذَاكَ جُزْءٌ ضِدُّ غَيْبٍ سِتْرُ عِرْفَانِ اِلٰهِي

8. ஆதியேகா கற்ற கலைகள் யாவும் அணையாம் ஆதியேகா.
ஓது கலைகள் ஞானக் கலையின் திரையு மெதிராம் ஆதியேகா.

٩ يَا اِلٰهِي عَرِّفْ عَيْنَ جُوْدِ حَقٍّ يَا اِلٰهِي

وَاَهْلِكْ اَعْدَآءَ الْحَقِيْقَةِ كَانَ اِنْسًا يَا اِلٰهِي

9. ஆதியேகா உண்மைக் காட்சி யூற்றை யெமக்கே யூட்டு ஏகா.
ஆதி பகைஞன் மனுவென்றாலும் அழிவதாக ஆதியேகா.

١٠ يَا اِلٰهِي وَارْزُقَنَّ وَصْلَ حَقٍّ يَا اِلٰهِي

وَاجْعَلَنَّ مَادَّةً بِالْجُوْدِ دَوْمًا يَا اِلٰهِي

10.ஆதியேகா உன்னிலெம்மைக் கலந்தருள்வாய் ஆதியேகா.
ஆதிமூல உண்மைச் சத்தை நம்மில் நித்யமாக்கு ஏகா.

١١ يَا اِلٰهِي وَاحْمِنَا عَنْ شِرْكِ نَارٍ يَا اِلٰهِي

وَاهْدِنَا سُبُلَ الْحَقَائِقِ وَفِرْدَوْسِ اِلٰهِي

11. ஆதியேகா இணையதான நரகினின்றும் காப்பு ஏகா.
ஆதி வழியாம் சோதி சுவனம் சேர்த்தருள்வாய் ஆதியேகா.

يَا اِلٰهِي يَا اِلٰهِي يَا اِلٰهِي يَا اِلٰهِي

ஆதியேகா, ஆதியேகா, ஆதியேகா, ஆதியேகா

# சோபனம்

صَلَوَاتٌ مَعْ سَلَامِ
عَلَى أَحْمَدِ الْاَنَامِ
اَهْلِ بَيْتِهِ الْكِرَامِ
صَحْبِهِ اَعْلَى الْمَقَامِ

ஸலவாதுன் மஉ ஸலாமி
அலா அஹ்மதில் அனாமி
அஹ்லி பைதிஹில் கிராமி
ஸஹ்பிஹீ அஉலல் மகாமி

مَرْحَبًا أَهْلًا وَسَهْلًا
اَنْبِيَاءَ كُلِّ رُسُلًا
قُطْبَ أَوْلِيَاءَ أَعْلَى
مَقَامَ الْعُرَفَاءِ اَهْلًا

மர்ஹபன் அஹ்லன் வஸஹ்லா
அன்பியாஅ குல்ல ருஸ்லா
குத்ப அவ்லியாஅ அஉலா
மகாமல் உரஃபாஇ அஹ்லா

சோபனம் சுப சோபனமே

சோபனம் ஆதிமுதற்கே

சோபனம் குழாத்தினர்க்கே

சோபனம் தோழர்தமக்கே

வாழ்த்துவோம் ஒன்றாய் நிறைந்து

மாண்புற விரவிக்கலந்து

ஊழ்வினையைப் போக்குவோமே

உறுதுணையை நாடுவோமே

முத்தி மோட்சம் பெற்றிடுவோம்

சுத்த சத்யமே அடைவோம்

சுத்த சத்யமே அடைவோம்

நித்ய ஜீவன் பெற்றிடுவோம்

(ஸல்லள்ளாஹு அலா முஹம்மத்

ஸல்லள்ளாஹு அலைஹிவஸல்லம்

ஸல்லள்ளாஹு அலா முஹம்மத்

யாரப்பி ஸல்லி அலைஹி வஸல்லிம்)

**(முற்றும்)**



# ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை

## மாதாந்திர ஞான விளக்கக் கூட்டம் நடத்தக்கூடிய வழிமுறை

- சங்கைக்குரிய ஷைகு நாயகம் அவர்களின் திருஉத்தரவுப்படி, சிதறுண்ட சிந்தனைகளை ஒருமுகப்படுத்த, 3 நிமிட நேரம் மௌனம் அனுஷ்டித்தல்.
- கிராஅத்
- வஹ்தத்துல் வுஜூத்
- சுத்த ஏகத்துவத்தை விளக்கக்கூடிய பாடல் : ஏகாந்தம்
- தலைவர் உரை
- உறுப்பினர்கள் உரை
- (உரைகளுக்கிடையே) மெய்ஞ்ஞானப் பாடல்கள்
- தவ்பா (பாப மன்னிப்பு) பைத்
- துஆ
- சோபனம் (ஸலவாத்து)




வெளியீடு:

**ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை,**

**இராமநாதபுரம்**

அச்சிட்டோர்: கிபுலா பிரிண்டர்ஸ், திருச்சி. செல்: 9659504855